Nestlé

Good Food, Good Life

Nestlé Lanka PLC செய்தி வெளியீடு
கொழும்பு: 29 மார்ச் 2012

**உயர் வெப்பநிலையில் பாலைச் சூடாக்கிப் பதப்படுத்தும் (UHT) புதிய இயந்திரத்தொகுதியொன்றை இலங்கையில் நிர்மாணித்து முதலீட்டில் மற்றுமொரு சாதனை இலக்கை நெஸ்லே நிறுவனம் எட்டியுள்ளது**

போஷாக்கு, ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வில் உலகில் முன்னிலை வகிக்கும் நிறுவனமாகத் திகழும் நெஸ்லே குருணாகலில் அமைந்துள்ள தனது நவீன உற்பத்தி ஏற்பாட்டு வசதியின் கீழ் உயர் வெப்பநிலையில் பாலைச் சூடாக்கிப் பதப்படுத்தும் புதிய இயந்திரத்தொகுதியொன்றை நேற்றைய தினம் திறந்துவைத்துள்ளதுடன், அடுத்த சில ஆண்டுகளில் இலங்கையில் ரூபா 10 பில்லியன் தொகையை முதலீடு செய்யவேண்டும் என்ற தனது அர்ப்பணிப்புடனான ஈடுபாட்டின் மூன்றாம் கட்டமாக இது அமைந்துள்ளது.

இப்புதிய இயந்திரத்தொகுதியானது நெஸ்லே லங்கா நிறுவனத்தின் தற்போதைய நடைமுறை வசதிகளின் விஸ்தரிப்பாக அமைந்துள்ளதுடன், 2011 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட மோல்ற்று பானவகை உற்பத்தி இயந்திரத்தொகுதி மற்றும் 2012 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஏற்படுத்தப்பட்ட நூடில்ஸ் உற்பத்தி இயந்திரத்தொகுதி ஆகியவற்றுடன் இணைந்து நாட்டில் ரூபா 10 பில்லியன் தொகை முதலீட்டை மேற்கொள்ளவேண்டும் என்ற ஈடுபாட்டின் ஒரு பகுதியாக கிட்டத்தட்ட ரூபா 3 பில்லியன் தொகையை இதுவரை முதலீடு செய்துள்ளது. நெஸ்லே நிறுவனத்தின் உயர் வெப்பநிலையில் பாலைச் சூடாக்கிப் பதப்படுத்தும் புதிய இயந்திரத்தொகுதியானது அந்நிறுவனத்தின் பால் அடிப்படையிலான பிரபல பானவகைகளின் உற்பத்தி ஆற்றலை மேலும் அதிகரிக்கச்செய்யும்.

இலங்கையில் தனியார்துறையைப் பொறுத்தவரையில் அதிகளவிலான தூய பாலைச் சேகரிக்கும் நிறுவனமாக நெஸ்லே திகழ்வதுடன், நாடெங்கிலும் தினசரி 15,000 இற்கும் மேற்பட்ட பண்ணையாளர்களிடமிருந்து பாலைக் கொள்வனவு செய்தும் வருகின்றது. நாட்டில் முன்னர் போர்ச்சூழல் நிலவிய வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் விசேட கவனஞ்செலுத்தியவண்ணம் 2009 ஆம் ஆண்டில் மும்முரமான பாலுற்பத்தி அபிவிருத்தி முன்னெடுப்பினுள் நெஸ்லே நிறுவனம் கால்பதித்திருந்தது. உள்நாட்டிலுள்ள பாலுற்பத்திப் பண்ணையாளர்களுக்கு குறிப்பிடத்தக்க அளவில் பயிற்சி மற்றும் அபிவிருத்தி முன்னெடுப்புக்களையும் ஏற்பாடு செய்து பண்ணையாளர்கள் தமது பாலை சௌகரியமான வழியில் சேமித்து விற்பனை செய்வதற்கு உதவியாக நாடெங்கிலும் பால் சேகரிப்பு நிலையங்கள் மற்றும் பாலைக் குளிரூட்டிப் பதப்படுத்தும் நிலையங்கள் பலவற்றையும் நெஸ்லே நிறுவனம் ஆரம்பித்துவைத்திருந்தது. இதன் மூலமாக இலங்கையில் உள்நாட்டு பாலுற்பத்தித் தொழிற்துறையை அபிவிருத்தி செய்து உள்நாட்டு பாலுற்பத்தியில் தன்னிறைவு அடைந்துகொள்வதற்கான செயற்பாடுகளுக்கு தீவிர ஈடுபாட்டுடன் பங்களிப்பாற்றிவருகின்றது.

*"இலங்கைத் தேசத்தின் அபிவிருத்தியில் நெஸ்லே நிறுவனம் வெளிப்படுத்திவருகின்ற உறுதியான, இடையறாத ஈடுபாட்டைக் காண்பது மிகுந்த மனநிறைவளிக்கின்றது. இன்று ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ள உயர் வெப்பநிலையில் பாலைச் சூடாக்கிப் பதப்படுத்தும் புதிய இயந்திரத்தொகுதியானது சமூகத்தில் பலருக்கு தொழில்வாய்ப்புக்களையும், சீரான வருமானத்தையும் வழங்கவுள்ளதுடன், இலங்கையில் காணப்படும் ஏராளமான வளர்ச்சிவாய்ப்புக்களை நாம் தெளிவாக இனங்கண்டு அதற்கமைவாகத் தொழிற்பட்டுவருவதையும் புலப்படுத்துகின்றது. நெஸ்லே ஆனது முன்னிலை வகிக்கும் ஒரு சர்வதேச நிறுவனமாக இருக்கின்றபோதிலும் நாம் தொழிற்படுகின்ற உள்நாட்டு சமூகங்கள் மத்தியில் ஒரு உள்ளங்கமாக இருந்து தொழிற்படுவதற்கு நாம் எப்போதும் முன்னுரிமை கொடுத்துவருகின்றோம். இலங்கையில் நாம் செயற்படுவதைப் போலவே 100 ஆண்டுகளுக்கும் மேலாக நாம் இவ்வாறான முன்னெடுப்புக்கள் பலவற்றில் பங்கெடுத்துவந்துள்ளோம். நெஸ்லே நிறுவனம் இலங்கையில் மிக ஆழமாகக் காலூன்றியுள்ளதுடன், பரஸ்பர வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி இலக்குடன் நாட்டிற்கு தனது ஆதரவை வழங்குவதில் உறுதியான ஈடுபாட்டுடன் உள்ளது"* என்று நெஸ்லே தெற்காசியாவின் தலைமை அதிகாரியும், ஆசியா, பசுபிக் ஓசானியா, ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு ஆகிய பிராந்தியங்களின் வலயப் பணிப்பாளருமான திரு. நந்து நந்திகிஷோர் அவர்கள் இந்த இயந்திரத்தொகுதியை ஆரம்பித்துவைக்கும் நிகழ்வில் உரையாற்றியிருந்தார்.

நெஸ்லே நிறுவனத்தின் உயர் வெப்பநிலையில் பாலைச் சூடாக்கிப் பதப்படுத்தும் புதிய இயந்திரத்தொகுதியை ஆரம்பித்துவைக்கும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்திருந்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சரான கௌரவ பசில் ராஜபக்ஷ அவர்கள் அதனை ஆரம்பித்துவைத்ததுடன், வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சரான கௌரவ ரிஷாட் பதியுதீன், சுற்றுச்சூழல் அமைச்சரான கௌரவ அனுர பிரியதர்ஷன யாப்பா, வடமேல்

மாகாண முதலமைச்சரான கௌரவ அத்துல விஜேசிங்க மற்றும் இலங்கைக்கான சுவிட்சலாந்து நாட்டின் தூதுவரான மேன்மைதங்கிய தோமஸ் லிட்ஸ்செர் ஆகியோரும் நிகழ்வில் கலந்து சிறப்பித்திருந்தனர்.

நெஸ்லே லங்கா பீஎல்சீ நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான திரு. அலொய்ஸ் ஹொவ்பவர் அவர்கள் கூறுகையில் *"குருணாகலில் அமைந்துள்ள எமது நவீன உற்பத்தி ஏற்பாட்டு வசதியின் மூலமாக உள்நாட்டில் விற்பனை செய்யப்படும் எமது உற்பத்திகளில் 90% இற்கும் மேற்பட்டவை தற்சமயம் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. மைலோ, நெஸ்டமோல்ற்று, நெஸ்பிறே மற்றும் மில்க்மெயிட் போன்ற பாலுற்பத்தி அடிப்படையிலான எமது பானவகைகள் இலங்கையர்களின் இல்லங்கள் தோறும் விரும்பப்படும் வர்த்தகநாமங்களாகத் திகழ்ந்துவருவதுடன், அதிகரித்த உள்நாட்டு கொள்வனவு மற்றும் உற்பத்தி ஆற்றல் மூலமாக இன்னும் பல வியப்பூட்டும் புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்தி எமது நுகர்வோருக்கு இன்ப அதிர்ச்சி அளிக்க முடியும். எமது இந்த சமீபத்தைய முதலீடானது நாட்டிலுள்ள பல விநியோகத்தர்கள் மற்றும் பண்ணையாளர்கள் மத்தியில் சிறந்த விளைவுகளைத் தோற்றுவித்து உள்நாட்டுச் சமூகத்தின் பல்வேறு மட்டங்களில் சிறந்த விளைவுகளை ஏற்படுத்த எமக்கு உதவும்"* என்று குறிப்பிட்டார்.

- முற்றும் -

**தயவுசெய்து மேலதிக விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும் -**

| | |
|---|---|
| **சமந்தா மென்டிஸ்**<br>**வர்த்தகத் தொடர்பாடல்கள் முகாமையாளர்**<br><br>**Nestlé Lanka Plc**<br>த.பெ. 189, கொழும்பு \| 440, ரீ.பீ. ஜயா மாவத்தை, கொழும்பு 10<br>மொபைல்: 0773405154 \| நேரடி: 4794597 \| பொது இல: 2 699 991 / 2 696 304, இணைப்பு: 524 \| தொலைநகல்: 5330044<br><br>**samantha.mendis@lk.nestle.com** | **தமித குலதுங்க**<br>**வர்த்தக பொது விவகாரங்கள் முகாமையாளர்**<br><br>**Nestlé Lanka Plc**<br>த.பெ. 189, கொழும்பு \| 440, ரீ.பீ. ஜயா மாவத்தை, கொழும்பு 10<br>மொபைல்: 0777915949 \| பொது இல: 2 699 991 / 2 696 304, இணைப்பு: 540<br><br>**damitha.kulatunga@lk.nestle.com** |